சொல்லப்பட்டிருக்கின்றன. நிச்சயம் அந்த வரையறைக்குள் அந்தப் பகுதி உட்படும்போது எதிர்காலத்தில் அங்கே புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

விளையாட்டுத் திடல்

***17885—திரு. க. கணபதி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 155, இராமாபுரம் பகுதியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

2022 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஏப்ரல் 22—சர்வதேச புவி நாள். புவியின் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும்பொருட்டு உலகத்தில் இருக்கின்ற அனைத்து நாடுகளாலும் கடைபிடிக்கப்பட்டு, பின்பற்றப்படுகின்ற மிக முக்கிய, சிறந்த நாளாகும். இந்த நாளில் அறிந்தோ, அறியாமலோ கடந்த காலத்தில் புவியில் மாசு ஏற்படுவதற்கு ஏதாவது செயலில் ஈடுபட்டிருந்தாலும், எதிர்காலத்தில் அதுபோன்ற செயல்களில் ஈடுபட மாட்டோம் என்கின்ற உறுதியை எடுத்துக்கொள்கின்ற நாளாகும். அந்த அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அனைவருக்கும் புவி நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற இராமாபுரம் பகுதியிலே விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையானது ஒரு நியாயமான கோரிக்கை. அந்த அடிப்படையிலே அங்கே இருக்கின்ற கே.பி. நகரிலே, சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான OSR *நிலம் 6* ground *கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று, அந்தப் பகுதியில் இருக்கின்ற* Royala *நகரில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 2½* ground *காலியிடம் கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இந்த ஆண்டே விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள், நன்றி சொல்லி விடுங்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த அறிவிப்பிற்கு இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 151—வது வார்டு, போரூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஏக்கர் இடம் உள்ளது. மகளிர் பயன்பெறும் வகையில், விளையாட்டுத் திடல் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு சொல்லியிருக்கின்ற, சென்னை மாநகராட்சியின் 151–வது வார்டு பகுதியிலிருக்கின்ற ஒரு ஏக்கர் காலியிடத்தில் நேற்றையதினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற மிக முக்கியமான அறிவிப்பான சட்டமன்றத் தொகுதியில் ஒரு* Mini Indoor Stadium *என்கின்ற அடிப்படையில், மேற்கண்ட இடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, வாய்ப்பிருப்பின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, விளையாட்டுத் திடல் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

24-4-2022 அன்று தேசிய பஞ்சாயத்து ராஜ் தினத்தை முன்னிட்டு நவம்பர் 1 ஆம் தேதி உள்ளாட்சிகள் தினமாகக் கொண்டாடுதல், ஆண்டிற்கு ஆறு கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுதல், ஊராட்சி ஒன்றியப் பிரதிநிதிகளின் அமர்வுப் படி உயர்த்துதல், புதிய வாகனங்கள் வழங்குதல், கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது வழங்குதல் உள்ளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்*